புதுமலர்: 20 இதழ்: 01 தை - மாசி

# அனல்

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

01.01.2023

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா



**The Year of Refuge 2023**

**I am with thee to deliver thee.**
Jeremiah 1:8

**அடைக்கல ஆண்டு 2023**

## உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்.

எரேமியா 1:8

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. புத்தாண்டு வாழ்த்து
02. அனலின் குரல்
03. கவிதை
04. கதையும் கற்றதும்
05. நற்செய்திப்பகுதி
06. சிறுவர் வட்டம்
07. குறுக்கெழுத்துப்போட்டி - 111
08. வாலிபர் வளாகம்
09. பெண்கள் பக்கம்
10. வினா விடை - 113
11. அருட்பணியாளர் சரிதை
12. அனலின் புத்தாண்டு வாக்குத்தத்தச்செய்தி
13. யாருக்கு நன்றி







## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் சஞ்சிகையின் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!




*புத்தாண்டில் புதுசிருஷ்டியாகி, புதுபெலன் பெற்று*
*குறைவுகளகன்று, தேவைகள் நிறைவேறி,*
*வியாதிகள் கடந்து, சுகம் நிறைந்து*
*அறிவடைந்து, நற்சாட்சியுடன் நாடோறும்*
*மனநிறைவுடன், ஆவிக்குரிய திருப்தியும்*
*ஆண்டவரோடுள்ள உறவின் திருப்தியும்,*
*ஆகாரக் குறைவின்றி ஆண்டவரில் அனுதினமும்*
*தங்கி வாழ அனலின்*
*புதுவருட நல்வாழ்த்துக்கள்.....!* - ஆசிரியர் -

# அனலின் குரல்



எமது புத்திக்கெட்டாத தேவனுடைய அற்புத செயல்களுக்காய் ஸ்தோத்திரம். புதுவருடம் புதுமைகளைக் காணும் அற்புத வருடமாகட்டும். மன்னாதி மன்னன் இயேசுவின் பாதம் பணிந்து அவர் சித்தம் அறிய எம்மை அர்ப்பணிப்போம். **'அவரின் நடத்துதல் என் வாழ்வில் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரிடமே விட்டுவிடுங்கள்'.** ஏனெனில் மிகச் சரியானதை, மிகவும் சிறந்ததை, முடிவில் வெற்றியை இயேசுவால் மட்டுமே நமக்குக் கொடுக்க முடியும்.

இயேசு கிறிஸ்து நேசித்த, அன்பு வைத்த அன்பான நண்பன் லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்கள் சென்ற பின்பு தான் இயேசு கிறிஸ்து அங்கே வருகை தந்தார். கிறிஸ்துவின் பிந்திய வருகை மிக வேதனையை லாசருவின் சகோதரிகளுக்கு ஏற்படுத்தியது. ஆனால் இயேசு கூறினார்: **யோவான் 11:15 நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்...** என்றார். இயேசுவின் தாமதத்திற்குள்ளும் ஓர் நன்மை, விசுவாசம் பெருகும்படியான நன்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோவான் 11:39 இயேசு: கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே என்றாள்.** கல்லை எடுத்துப் போடுங்கள் என்று இயேசு சொன்ன போது மார்த்தாள் சொன்னாள்; 'நாறுமே நான்கு நாளாயிற்றே என்றாள்'.

**சடலம் நாறும் என்பது உண்மை ஆனால் அந்த உண்மைக்கு மேலான ஓர் அற்புதம் இயேசுவிடம் உண்டு.**

உங்கள் எண்ணங்கள் சரியானவை தான், கடந்த காலங்களில் உங்கள் மனநிலை தேவனுடைய வல்லமையை விசுவாசிக்க மறுத்திருக்கலாம். உங்கள் புத்திக்கு மேலான அறிவு தேவனிடம் உண்டு. எங்கள் புத்திக்கு மேலான அற்புதம் தேவனிடம் உண்டு. மார்த்தாளின் பார்வையில் நாற்றம்; கிறிஸ்துவின் பார்வையில் லாசருவிற்கு ஜீவன்.

லூக்கா 08ஆம் அதிகாரத்தில் யவீருவின் மகள் மரித்த போது; 'இயேசு அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை. நித்திரையாயிருக்கிறாள்' என்ற போது அங்கேயிருந்த மக்கள் அவள் மரித்துப்போனாளென்று அறிந்ததினால் அவரைப் பார்த்து நகைத்தார்கள். அவர்கள் அறிந்த அறிவு மரித்துப் போனாள் என்பது தான். ஆனால் இயேசு அறிந்திருந்தது அவளுக்குள் ஜீவன் உள்ளது என்று.

எமது புத்திக்கெட்டாத இயேசுவின் வல்லமை, எமது அறிவுக்கெட்டாத – இயேசுவின் அற்புதம். இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என்பது மக்களின் எண்ணம். இதற்கு மேலும் அற்புதம் செய்யலாம் என்பது தேவனின் எண்ணம். மரணம் தான் முடிவு என்பது எமது பார்வை; மரணத்தின் மேலும் அதிகாரம் உடையவர் இயேசு.

கடந்த வருடத்தில் தேவனுடைய வல்லமை, அவருடைய மேன்மையான அறிவை புரிந்து கொள்ள முடியாமல் போனீர்களா? உங்கள் வாழ்வில் இனி நாற்றம் தான் என முடிவுகட்டிவிட்டீர் களா? போதும் எமது புத்திக்கெட்டிய தீர்மானங்களும், முடிவுகளும். உங்கள் தீர்மானங்களுக்கும் முடிவுகளுக்கும், நினைவுகளுக்கும் மேலாக கிரியை செய்கின்ற இயேசுவிடம் சகலவற்றையும் ஒப்புக்கொடுங்கள்.

இயேசுவை அவருடைய அநந்த ஞானத்தை, ஒப்பற்ற வல்லமையை விசுவாசியுங்கள். உங்கள் வாழ்வின் மரித்தவைகளை உயிர்ப்பிப்பார். உங்களால் முடியாததை இயேசு நிறைவேற்றுவார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய்மையாக்கும் தூயவர் இயேசு!

தூய்மையானவர் மகிமையானவர்
மேன்மையானவர் தூய வாழ்வின் காரணர்
பரிசுத்தமே அவர் அலங்காரமானவர்
பாவமோ அவர் பாரா சுத்தக்கண்ணர்
மேலானது அவர் சிங்காசனம்
வனாதி வானங் கொள்ளாதவர்
தாழ்மை அவர் உறைவிடம்
தூய இதயம் அவர் வாசஸ்தலம்
மாசற்ற மகிமையுடையவர்
நோக்கினார் நரரின் புலால் கழுவ
அறிவுக்கெட்டா அறிவு கொண்டீர்
புலமைக்கெட்டா வல்லமை கொண்டீர்
பாவம் போக்கும் சித்தங் கொண்டீர்
பாவ மனுஷ சாயலானீர்
எடுத்தீர் ஏழ்மையின் கோலம்
தொடுத்தீர் பாவத்துடன் யுத்தம்
அறைந்தீர் பாவத்தை சிலுவையில்
உடைத்தீர் பாவ அடிமையை
பாவம் போக்கும் பரிகாரி
தம் ஜீவன் ஈந்த ஜீவாதிபதி
மனுக்குலம் வாழ தம் ஜீவன் தந்த வள்ளல்
தூய்மை அடைய 2023இல்
நம்பு தூய்மையாக்கும் தூயவரை!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மேலானவைகளைத் தேடுங்கள்

❑ வை. விமலதாஸ்

கழுகு ஒன்று மரத்தின் உச்சியில் உள்ள ஒரு கிளையில் முட்டையிட்டு அதனை அடைகாத்து வந்தது.

ஒருநாள் உணவுக்காக அது கூட்டை விட்டு வெளியே பறந்த சமயத்தில் அடைகாத்து வைத்திருந்த முட்டைகளில் ஒன்று பலமாக வீசிய காற்றின் காரணமாக மரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டது.

ஆனாலும் கீழே விழுந்த அந்த முட்டை உடையவில்லை. ஏனென்றால் அந்த மரத்தின் அடியில் ஒரு கோழியும் தனது முட்டைகளை அடைகாத்து வந்திருக்கிறது. மேலிருந்த கழுகு முட்டை கோழி முட்டைகள் இருந்த இடத்திற்கு அருகே தான் விழுந்தது. ஆனாலும் முட்டைக்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை. சிறிது நேரம் கழித்து இதை அறியாது அங்கு வந்த கோழி மரத்தில் இருந்து விழுந்த கழுகின் முட்டையையும் தன் முட்டை என்று நினைத்து தன்னுடைய மற்ற முட்டைகளோடு சேர்த்து பக்குவமாக பாதுகாத்து அடைகாத்தது.

சில நாட்கள் சென்ற பிற்பாடு மரத்தின் உச்சியில் அடைகாத்திருந்த கழுகு தன்னுடைய குஞ்சுகளை அழைத்து கொண்டு வேறு ஒரு பாதுகாப்பான இடத்திற்கு பறந்து விட்டது. அதேசமயம் மரத்தின் அடியில் அடைகாத்த கோழியின் முட்டைகளும் கோழிக் குஞ்சுகளாக மாறின. அவற்றோடு சேர்ந்து கீழே விழுந்த கழுகின் முட்டையும் கழுகுக் குஞ்சாக மாற்றம் பெற்றது. இப்போது கோழி தான் அடைகாத்து பொரித்த எல்லாக் குஞ்சுகளையும் அழைத்து கொண்டு குப்பைகள் நிறைந்த ஒரு பகுதிக்கு சென்று குப்பையை கிளறி அங்கிருந்த இரையை கொத்தி கொத்தி தின்று கொண்டிருந்தது.

இப்போது கோழிக் குஞ்சுகளின் கூட்டத்தில் இருந்த கழுகும் மற்ற கோழிகளை போலவே குப்பையை கிளறி அதற்குள்ளிருந்த இரைகளைக் கொத்திக் கொண்டிருந்தது.

இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருக்கும் போது ஒருநாள் வானத்தில் பறந்து கொண்டிருந்த மற்ற கழுகுகளைப் பார்த்து கோழிகளோடு இருந்த கழுகு இன்னொரு கோழியை பார்த்து கேட்டதாம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எம்மாலும் அந்தக் கழுகுகளைப் போல வானத்தில் பறக்க முடியாதா?'

அதற்கு கோழி சொன்னதாம்,

'இல்லை இல்லை கழுகுகளுக்குத் தான் பறக்கும் திறமை உண்டு. எம்மால் அவ்வளவு உயரத்தில் பறப்பதற்கு வாய்ப்பே இல்லை'

அதற்கு அந்த கழுகு கேட்டதாம்,

'நான் ஒரு தடவை முயற்சி பண்ணி பார்க்கவா?'

அதற்கு கோழி; 'உன்னாலும் என்னாலும் எப்பவுமே கழுகுகளைப் போன்று பறக்க முடியாது,

நாம் எம் வாழ்க்கை பூராகவும் உணவுக்காக இந்த மாதிரி குப்பைகளைத் தான் கிளறிக் கொண்டு இருக்க வேண்டும்'

என்று சொல்லிவிட்டு நகர்ந்தது.

கோழி சொன்னது அனைத்தையும் உண்மை என்று நம்பிய கழுகு அதன் பிறகு பறப்பதற்கு முயற்சியே செய்யாமல் தன் வாழ்நாள் முழுவதும் கோழியை போலவே வாழ்ந்ததாம்.

ஆம் நண்பர்களே, அந்தக் கழுகின் பரிதாபமான நிலையைப் பார்த்தீர்களா? கழுகு மிக உயரத்தில் கம்பீரமாக பறக்க வேண்டிய பறவை. ஆனால் அது தன்னுடைய நிலையைப் புரியாமல் கோழிகளுடன் சேர்ந்து குப்பைகளைக் கிளறிக் கொண்டிருக்கிறது. கடந்த வருடம் நிறைவடைந்து புதிய வருடத்திற்குள் வந்திருக்கும் நாம் எம்முடைய வாழ்க்கையை திரும்பி பார்ப்போம். எம்மையும் ஆண்டவர் மேலான காரியங்களுக்காக, பரிசுத்தமான வாழ்க்கைக்காக அழைத்திருக்கிறார். அந்த அழைப்பை உணர்ந்தவர்களாய் பரிசுத்தமாய் மேலான வாழ்க்கை வாழ்கின்றோமா? அல்லது கோழியைப் போல் வாழும் கழுகைப் போன்று பாவத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?

**கொலோசெயர் 3:1 நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.**

---



**சரியான விடை எழுதியவர்களில் பராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 112**
**பா.மாலா**
**[வடகாடு]**

**குறுக்கெழுத்துப் போட்டி - 1110**
**அ.சுதர்சினி**
**[வேரவில்]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தரோ உதவி செய்தார்



❏ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

கடந்த ஆண்டு எத்தனை போராட்டம், பதற்றம், வறுமை, பொருளாதார நெருக்கடி, பலதரப்பட்ட வியாதிகள்... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனாலும் இக்கட்டுக் காலங்களில் உதவி செய்யும் மனுஷனுடைய உதவி விருதா? என்று தாவீது சொன்னது போல **'தேவன் நாம் கடந்து வந்த சகல இக்கட்டான வேளைகளிலும் நமக்கு உதவி செய்தார்'.** அவருக்கே சகல கனமும், மகிமையும், துதியும் உண்டாகட்டும். ஆமென்.

**சங்கீதம் 118:13 நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்; கர்த்தரோ எனக்கு உதவி செய்தார்.**

ஆடுகளின் பின்னே திரிந்த தாவீதை தேவன் அரசனாக மாற்றிய போது அல்லது அரசனாக மாற்றப் போகிறார் என்று அறிந்த போது தாவீதின் வாழ்க் கையில் பலதரப்பட்ட சதிகளை பலதரப் பட்ட மனிதர்கள் செய்ய ஆரம்பித்தார்கள்.

நீங்கள் சாதாரணமான மனிதனாக இருக்கும் போது ஜனங்கள் உங்களை கண்டு கொள்ளமாட்டார்கள். ஆனால் தேவ கிருபை உங்கள் மேல் வெளிப்படும் போது தேவ ஆவியானவர் உங்கள் மூலம் மகிமைப்பட ஆரம்பிக்கும் போது அல்லது தேவ சித்தம் ஒன்று உங்கள் மேல் வைக்கப்பட்டிருப்பதை மற்றவர்கள் உணரும் போது ஜனங்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? **உங்களை தகுதியில்லாதவனாக தேவன் முன் நிற்கும்படி தள்ளிவிட பார்ப்பார்கள். தீமைகளுக்குள்ளே அகப்பட வைக்க யோசிப்பார்கள். ஆவிக்குரிய அறிவோ அல்லது சரீரப்பிரகாரமான அறிவோ எதற்கு வேண்டுமானாலும் நடத்த ஆரம்பிப்பார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுல் ராஜா தாவீதின் மேல் தேவ ஆவியானவர் வந்து இறங்கியதையும் தன்னைவிட்டு போனதையும் உணர்ந்த போது தன் மகனை தாவீது விரும்பும் சம்பவத்தை வைத்தே அவனை நான்கு தடவைகள் கொலை செய்ய எத்தனிக்கிறான்.

தாவீது ராஜாவான பின்பு பல மனிதர்கள் அவனை கொலை செய்ய தேடுகின்றார்கள். கூடவே இருந்த மனிதர்கள் தங்கள் குதிக்காலை தாவீதுக்கு எதிராக எடுக்கிறார்கள். எதற்கு – அவனைத் தள்ளுவதற்கு, அழிப்பதற்கு, பெலவீனப்படுத்துவதற்கு.

ஆம் எனக்கு அன்பானவர்களே, உங்களுடைய வாழ்க்கையிலும் நீங்கள் தேவனோடு ஓர் நெருக்கமான உறவு வைத்திருப்பதினால் தேவ ஆசீர்வாதம் உங்கள்-மேல் தங்குவதால் பல மனிதர்கள் கடந்த ஆண்டிலே உங்களை குற்றம்பிடிக்க எத்தனித்திருக்கலாம். சூழ்ச்சியாக சில காரியங்களை செய்து உங்களை குற்றவாளியாக தலைகுனிய வைக்க திட்டமிட்டிருக்கலாம்.

பிரியமானவர்களே எதுவாக இருந்தாலும் தேவன் உங்களை அப்படிப் பட்டவர்களுடைய கையில் ஒப்புக்கொடுக்காமல் காத்து உதவி செய்தார். தொடர்ந்தும் அப்படியே செய்வார்.

**எரேமியா 20:10b என்னோடே சமாதானமாயிருந்த அனைவரும் நான் தவறிவிழும்படிக் காத்திருந்து: ஒருவேளை இணங்குவான், அப்பொழுது அவனை மேற்கொண்டு, அவனில் குரோதந் தீர்த்துக்கொள்வோம் என்கிறார்கள்.**

சகோதர சகோதரிகளே, பெரியவர்களே, கடந்த ஆண்டிலும் உங்களுக்கு இப்படிப்பட்டதான அனுபவங்கள் இருந்திருக்கலாம். இப்படியான நெருக்கடிக்குள்ளாக கடந்து சென்றிருக்கலாம். நாம் வைராக்கியம் பாராட்டி வாழும் விஷயங்களிலேயே நாமே எப்போது விழுவோம் என்று சுற்றிலும் பார்த்துக் கொண்டிருக்கும் ஜனங்கள் நன்மைக் கல்ல, தீமைக்கு ஏதுவாக எம்மை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வேளைகளிலும் எரேமியாவை அப்படிப்பட்ட மக்கள் மத்தியில் விழாமல் வெட்கப்பட வைக்காமல் உதவி செய்து நடத்திய தேவன் உங்களையும் உங்களைச் சுற்றியுள்ள ஜனங்கள் மத்தியிலே விழாமல் வெட்கப்பட வைக்காமல் தேவன் நடத்த வல்லவராயிருக்கிறார்.

**தாவீது சொன்னது போல, கர்த்தரோ எனக்கு உதவி செய்தார்.**

ஆம் பிரியமானவர்களே, உங்களுக்கும் இந்த புதிய ஆண்டிலே தேவன் உதவி செய்வாராக. உங்களை எதிர்க்கும் ஜனங்கள் மத்தியிலும், உங்களைத் தள்ளிவிடும் ஜனங்கள் நடுவிலும் தேவன் உங்களுக்கு உதவி செய்து உங்களை இந்த ஆண்டிலே மகிமைப்படுத்த வல்லவராயிருக்கிறார்.

**ஏசாயா 14:10 அவர்களெல்லாரும் உன்னை நோக்கி: நீயும் எங்களைப்போலப் பலட்சயமானாயோ? எங்களுக்குச் சமானமானாயோ? என்று சொல்லுவார்கள்.**

எம்மைச் சுற்றியுள்ள ஜனங்கள் நாமும் அவர்களைப் போல மாற வேண்டும், விழவேண்டும், பெலவீனமாகிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டும் என்ற எதிர்பார்ப்போடே காத்துக் கொண்டிருக்கிறார்கள். **நாம் பலட்சயமாக போவதே பலரது எண்ணமாக இருக்கிறது.**

ஆனாலும் கர்த்தரைச் சார்ந்திருக்கும் ஜனங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. பிரியமானவர்களே, இந்த புதிய ஆண்டிலே கர்த்தரைச் சார்ந்திருங்கள். கர்த்தரைப் பற்றியிருங்கள். கர்த்தரை நம்பியிருங்கள். உங்களை யார் விழும்படி தள்ளினாலும் கர்த்தர் கைவிடாமல் உதவி செய்வார்.

தீமையான யோசனையை உடைய மனிதர்களே தள்ளுண்டு போவார்கள்.

தாவீதுக்கு எதிராக தீமையான யோசனை கொண்டிருந்த சவுல் தேவனாலே தள்ளப்பட்டுப்போனான்.

எரேமியா தீர்க்கதரிசிக்கு எதிராக பொல்லாத நினைவுகளைக் கொண்டிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் தேவனாலே தள்ளப்பட்டு தண்டிக்கப் பட்டுப்போனார்கள்.

எனவே பிரியமானவர்களே நீங்கள் எதற்கும் கலங்கவேண்டாம், பயப்படவேண்டாம், கர்த்தர் உங்களையோ, உங்கள் பிள்ளைகளையோ, உங்கள் குடும்பத்திலுள்ளவர்களையோ, உங்களுக்கு எதிரான நினைவு கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஒப்புக் கொடுக்காமல் எல்லாவித கண்ணிகளில் நின்றும் காப்பாற்றி இந்த புதிய ஆண்டு முழுவதும் அற்புதமாக நடத்துவாராக.



## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'நான் இரு எழுத்துக்களுடையோன், நாங்கள் பிறக்கிறோம் – பிள்ளைகளுமல்ல,
இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய பிசாசுதான் – எங்கள் தகப்பன்.
ஒருவனால் நாங்கள் ஊதப்பட்டால் – அவன் வஞ்சனைக்காரனாவான்.
நாவு வில்லானால் – நாங்கள் அம்புதான்.
நாங்கள் என்ன துணியா அழுக்கா, களைந்துபோடச் சொல்லுகிறானே
அப்போஸ்தலன்' – நான் யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2022 கார்த்திகை - மார்கழி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**வெண்கல சர்ப்பம்**

(எண்ணாகமம் 21:6-9, 11இராஜாக்கள் 18:4, மத்தேயு 10:16, யோவான் 3:14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் வெளிச்சம் கொடுப்பீர்கள்

❒ ஜசிந்தா அக்கா




ஹலோ குட்டீஸ் இயேசப்பாவுடைய புதுக்கிருபையினால் புதுவருடத்திற்குள் வந்திருக்கிற உங்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

பிள்ளைகளே வருடத்தின் தொடக்கத்திலிருந்து முடியும்வரை முழுமையான ஒரு ஆண்டை இயேசப்பா உங்களுக்கு தந்திருக்கிறார். நீங்களும் உங்களை அவரிடத்தில் முழுமையாக ஒப்படைத்து இயேசப்பாவிற்காக வாழவேண்டும்.

ஒரு இடத்தில் இருவர் சந்தித்தார்கள். ஒருவருடைய கரத்தில் ஒரு வாழைப்பழம் இருந்தது. அதை அவர் உரித்து ஒரு கடி கடித்து ஒரு துண்டை எடுத்துக் கொண்டு மிகுதியை மற்றவரிடத்தில் கொடுத்தார். அவர் எனக்கு வேண்டாம் என்று மறுத்துவிட்டார். ஏன் என்று சிந்திக்கிறீர்களா? ஒருவர் கடித்த பழத்தின் மிகுதி எச்சியாகிவிடும் அல்லவா? மற்றவர் அதை சாப்பிடுவது அருவருப்பு, முடியாத காரியம். வாழைப்பழத்தை முழுமையாக கொடுத்தால் அதில் தூய்மை உண்டு. மனதிற்கு மகிழ்ச்சி.

இதே போல் தான் உங்கள் வாழ்க்கையில் பாதி வாழ்க்கையை பிசாசிற்கும், உங்கள் விருப்பத்திற்கும் கொடுத்துவிட்டு மிகுதி பாதி வாழ்க்கையை இயேசப்பாவிற்குக் கொடுக்கும் போது அதில் அவர் பிரியமாய் இருக்கமாட்டார். அது அவருக்கு அருவருப்பாய் இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளே நீங்கள் முழுமையானவர்கள். எப்படி என்று கேட்கிறீர்களா?


<u>கடையில் வாங்கிய புத்தம் புதிய மெழுகுவர்த்தி போன்றவர்கள்.</u>

ஆகவே நீங்கள் முழுமையானவர்கள். புதிதாக இருக்கும் உங்களை புதுமை செய்யும் இயேசு சுவாமியின் கரத்தில் முழுமையாக ஒப்படைத்துவிடுங்கள். அவருடைய கரத்தில் இருந்து பிரகாசிப்பீர்கள்.



'நான் சிறு பிள்ளையாய் இருக்கிறேன், இது எப்படியாகும்' என்று நினைக்கிறீர்களா? 'பாலகர் வாயினால் துதி உண்டுபண்ணுவேன்' என்று இயேசு சுவாமி சொல்லியிருக்கிறாரே. உங்களைத் துதிக்கச் செய்வார்.

சின்ன சாமுவேல் தேவனுக்காக தேவாலயத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தான். அவன் படுத்துக்கொண்டிருக்கும் பொழுது 'சாமுவேலே, சாமுவேலே' என்று கர்த்தர் அவனைக் கூப்பிட்டார். அவனோடு பேசினார். உங்களையும் கூப்பிடுவார். உங்களோடும் பேசுவார். நாகமான் சுகமடைய சிறைப்பிடிக்கப்பட்ட சிறு பெண் தேவனால் பயன்படுத்தப்பட்டாள். இதே போல உங்களையும் இயேசு சுவாமி பயன்படுத்துவார்.





பிள்ளைகளே.... ஆயத்தமா? ஆமென்.

இயேசு.....

இயேசு கற்பித்தாரே ஒளி வீசவே

சிறு தீபம் போல ஒளி வீசவே

அந்தகார லோகில் ஒளி வீசுவோம்


அங்கும் இங்கும் எங்கும்

பிரகாசிப்போம்.

**மத்தேயு 5:16 உங்கள் வெளிச்சம் மனுஷர் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இடமிருந்து வலமாக**

# குறுக்கெழுத்துப் போட்டி 111

01. நாபாலின் மனைவி
04. மொர்தெகாய் இந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன் (குழம்பியுள்ளது)
06. எஸ்றா இந்த நதியண்டையிலே உபவாசத்தை கூறினான்
09. இவர் கர்த்தருடைய சுதந்திரவீதம்
12. யோயாக்கீமுடைய ஸ்தானத்தில் ராஜாவான அவன் குமாரன்
13. கோலியாத்தின் சகோதரனை வெட்டியவன்

**வலமிருந்து இடமாக**

02. கர்த்தர் இவன் மீது ஒரு அடையாளத்தைப் போட்டார்
03. கர்த்தருடைய கண்கள் ............ காக்கும்
05. 'என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறது' எனக் கூறியவன்
07. ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் ............ ஆவியை நொறுக்கும்
11. 'நீர் என்னை இப்பொழுது மூன்றுதரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன்' எனக் கூறியது
12. எப்ரோனிலே தாவீதோடு போய்ச்சேர்ந்த ஆரோனின் சந்ததியாரின் அதிபதி

**மேலிருந்து கீழாக**

01. இந்த தீர்க்கதரிசி அந்தியோகியாவில் சொன்ன தீர்க்கதரிசனம் கிலவுதியு ராஜாவினுடைய நாட்களில் உண்டாயிற்று
02. அமித்தாய் தீர்க்கதரிசியின் ஊர்

**கீழிருந்து மேலாக**

08. 'கர்த்தர் நீதியுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர்' எனக்கூறியவன்
10. 'எருசலேமில் வாசம் பண்ணுகிற தேவனே தேவன்' எனக் கூறியவன்
11. இவர் சகல ஜனங்களாலும் கனம் பெற்ற நியாயசாஸ்திரி
13. ஆசாரிய ஊழியம் செய்த ஆரோனின் குமாரரில் ஒருவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




☐ போதகர் வை.தேவதாஸ்




**கி**றிஸ்துவுக்குள் அன்பான அனல் சஞ்சிகை வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள்.

எப்படியிருக்கிறீர்கள்? நீங்கள் அனைவரும் சுகமாக இருக்கின்றீர்களா? உங்கள் பிரயாசங்கள் ஆசீர்வாதமாக இருக்கின்றதா? உங்கள் உடல் நிலைகள் எப்படியுள்ளது? நிம்மதியோடும், சமாதானத்தோடும் வாழ்கின்றீர்களா?

**நீங்கள் சகலவிதத்திலும் வாழ்ந்திருக்கும்படி கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. தளர்ந்துவிட வேண்டாம். கர்த்தர் நம்மை ஒரு போதும் கைவிடவேமாட்டார்.**

'உங்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன். புத்தாண்டு வாழ்த்துக்கள்'. *Happy New Year!*

**கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.** கர்த்தர் நம்மைக்கைவிடவேயில்லை. எல்லோரும் நம்மை மறந்த போதும் நம்மை மறக்காத அன்பின் தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம். கடந்த வருடம் முழுவதும் அவர் நம்மைப் பாதுகாத்தார். அவர் நமக்குத் துணையாக நின்றார். தமது சிறகுகளாலே அவர் நம்மை மூடிப்பாதுகாப்பார். அவருக்கே ஸ்தோத்திரம்.

**சங்கீதம் 107:28 அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வாக்குத்தத்தத்தை கடந்த ஆண்டில் நமக்குத் தந்து அவ் வாக்குத்தத்தத்தின்படியே நம்மை விடுவித்து பாதுகாத்து வந்தார். அவர் நல்லவர்.

**எத்தனையோ இக்கட்டுக்கள், நெருக்கடிகள் நம்மைச் சூழ்ந்து கொண்ட போதும் தேவாதி தேவன் எல்லாத் துன்பங்களிற்கும் எம்மை விலக்கி மீட்டுக்கொண்டார்.**

சிந்தித்துப்பாருங்கள்... கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பாருங்கள். தேவன் எவ்வளவு அற்புதமாய் நம்மை வழிநடத்திவந்தார். **'இதுவரை உதவி செய்த எபனேசர் இனியும் நம்மை நடத்திச் செல்வார்'.** அவரது இரக்கங்களுக்கு முடிவேயில்லை.

அடுத்ததாக, என்ன.... ஓர் புதிய ஆண்டு பிறந்துவிட்டது. 2022 கடந்து 2023 உதயமாகியுள்ளது. ஒரு வயதும் கூடிவிட்டது. நாட்கள் வேகமாக கடந்தோடிக்கொண்டிருக்கிறது. இந்தப் பரபரப்பான சூழ்நிலையிலும் தேவ சமூகத்தில் பொறுமையுடன் காத்திருப்பதே தேவையான விடயமாகும்.

இப் புதிய ஆண்டிலும் வழமையான வாலிபர் வளாக செய்திகளைத் தவிர்த்து தேவ சமூகத்தில் இருந்து ஓர் வாக்குத்தத்தத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஜெபத்துடனும், பொறுமையுடனும் தேவ செய்தியை வாசிக்கும்படி தயவுடன் வேண்டுகிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**ஏசாயா 32:18 என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்.**

ஆம் பிரியமானவர்களே! ஒரு தேவ பிள்ளைக்கு கிடைக்கும் ஆசீர்வாதத்தை மூன்று விதங்களில் இவ் வசனம் விபரிக்கின்றது.

1. சமாதான தாபரம்
2. நிலையான வாசஸ்தலம்
3. அமைதியாய்த் தங்கும் இடம்

முதலாவதாக கர்த்தர் சொல்கிறார்: **'என் பிள்ளைகள் சமாதானம் நிறைந்த குடியிருப்புக்களில் வாழ்வார்கள்'.** ஆம் அருமையானவர்களே, நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கை சமாதானமாக இருக்கும். உங்கள் வீட்டில் சமாதானம் இருக்கும் என கர்த்தர் சொல்கிறார்.

நீங்கள் உங்கள் அயல் வீட்டாருடன் சண்டைகளுடன் வாழ்வது தேவ சித்தமல்ல. வீட்டை வாடகைக்கு தந்த உரிமையாளருடன் வாக்குவாதப்படுவதும் தேவசித்தமல்ல. வீட்டுக்குள்ளேயே இருக்கின்ற உறவுகளோடு ஐக்கியமில்லாமல் சண்டைகளோடு வாழ்வதும் தேவ சித்தமல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக நீங்கள் குடியிருக்கின்ற வீடுகள் சமாதானமாக இருக்க வேண்டும் என்பதே தேவ சித்தமாகும். அந்த ஆசீர்வாதத்தோடு நீங்கள் வாழ வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

**சங்கீதம் 85:8 கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்.** பிரியமான தேவ ஜனங்களே தேவன் உங்களுக்கு சமாதானத்தை வாக்குப்பண்ணுகிறார்.

வேதம் சொல்கிறது; **ஏசாயா 54:13 உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.** பிள்ளைகளால் மனக்குழப்பமல்ல; பிள்ளைகளால் சமாதானம் உண்டாகும். பிள்ளைகளும் எங்கிருந்தாலும் சமாதானமாக இருப்பார்கள் - விசுவாசியுங்கள்.

உங்களது சமாதானம் மிகச் சிறப்பான நிலைமைக்கு வரும். அந்தளவிற்கு கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**யோவான் 14:27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.**

இயேசு ஒரு மனிதனுக்கு தருகின்ற மன அமைதி அல்லது சமாதானம் என்பது மிகவும் சிறப்பான உயர்ந்த காரியம் ஆகும். என்னதான் ஆபத்துக்கள், போராட்டங்கள் சூழ்ந்து கொண்டாலும் இச் சமாதானம் நம்மைவிட்டு ஒரு போதும் நீங்காது. இச் சமாதானத்தையே தேவன் நமக்கு வாக்குப்பண்ணுகிறார்.

இரண்டாவதாக கர்த்தர் எப்படி சொல்கிறார் என்றால், **'என் பிள்ளைகள் நிலையான இடங்களில் பாதுகாப்பாக வாழ்வார்கள்'**

உங்கள் வீடு சமாதானமாக இருந்தால் மாத்திரம் போதாது; **'அது நிலையானதும் பாதுகாப்பானதுமாக இருக்க வேண்டும்'** என தேவன் விரும்புகின்றார். இந்த உலகத்தில் நமக்கு நிலையானது ஏதும் இல்லை, எதுவும் நிரந்தரமில்லை. அனைத்தும் தற்காலிகமானதே. இருப்பினும் **நாம் வாழும் வரையிலும் நமது குடியிருப்பு நிலையானதும்** பாதுகாப்பானதுமாக **இருக்க வேண்டும்** என்பது தேவனுடைய விருப்பமாகும்.

கர்த்தர் தாவீதுக்குச் சொல்கிறார்: **11சாமுவேல் 7:16 உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்.**

**அலைச்சலில்லாத வீட்டை தேவன் ஆசீர்வதிக்க விரும்புகிறார்.** பூனை குட்டிகளை காவித்திரிவது போல் அங்குமிங்குமாக அலைந்து திரியாமல் அலைச்சல் இல்லாத வாழ்வை தேவன் தருவார்.

இந்த வீட்டிற்கு செய்வினை வைத்துவிட்டார்கள், இனி இங்கு இருக்க முடியாது; சுற்றிவர இருக்கும் அயலகத்தாரால் நிம்மதி இல்லை, இந்த வீட்டில் ஒரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாதியாக உள்ளது, உழைப்பது எதுவும் நிற்கிறதில்லை, நிம்மதியான நித்திரையில்லை என பல காரியங்களை நீங்கள் அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால் தேவனோ நிலையான – பாதுகாப்பான இடத்தை உங்களுக்கு தரவிரும்புகிறார். தாவீதைப் போல் இந்த ஜெபத்தைச் செய்யுங்கள். **11சாமுவேல் 7:26 உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக.** ஆமென்.

மூன்றாவதாக தேவன் சொல்லும் காரியம்; **'என் பிள்ளைகள் அமைதியாய் தங்கும் இடங்களில் குடியிருப்பார்கள்'**. அதாவது குழப்பமில்லாத இளைப்பாறுதலுள்ள இடங்களில் குடியிருப்பார்கள்.

தேவபிள்ளைகளே உங்களது வாழ்க்கை அமைதியாக, குழப்பமில்லாதபடி இருக்க வேண்டும் என பரம தகப்பன் விரும்புகிறார். ஆண்டவரது விருப்பங்களைப் பார்த்தீர்களா?

என் பிள்ளைகள் சமாதானமான இடங்களில் வாழ வேண்டும்,

என் பிள்ளைகள் நிலையான பாதுகாப்பான இடங்களில் வாழ வேண்டும்.

என் பிள்ளைகள் அமைதியான குழப்பமில்லாத இடங்களில் வசிக்க வேண்டும்.

வருகின்ற நாட்களிலும் தேவன் இதனை உங்களுக்கு நடப்பித்து தரும்படி அவரையே நோக்கிப்பாருங்கள்.

நாம் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படியே தேவன் விரும்புகிறார். **சங்கீதம் 107:30 அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்.**

இந்த சந்தோஷத்தை நீங்கள் காணும்படி தேவன் செய்வார். **சங்கீதம் 23:2 அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.** என தாவீது சொல்கிறார். இளைப்பாறுதல், மன அமைதி உள்ள இடமாக உனது வீட்டை மாற்றி தேவன் ஆசீர்வதிப்பார்.

அருமையானவர்களே **ஏசாயா 32:18**இன்படி எமது வாழ்க்கை ஆசீர்வாதமாக இருப்பது தேவனின் விருப்பம் என்பதை இதுவரை உங்களுக்கு தெரியப்படுத்தினேன்.

தேவனது விருப்பத்தின்படி எமது வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் இரண்டு விதமான காரியங்களை நாம் செய்ய வேண்டும். அவைகளை நாம் செய்யும் பொழுது தேவனது அசீர்வாதம் நம் வாழ்க்கையில் கிடைக்கும். அதனையும் சுருக்கமாக உங்களுக்கு காண்பிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செய்ய வேண்டியவைகள்:

## 01. பரிசுத்த ஆவியானவரால் நிறைந்த வாழ்க்கை வாழவேண்டும்

பாருங்கள் **ஏசாயா 32:18**இல் நாம் இதுவரை பார்த்த ஆசீர்வாதங்களை உள்ளடக்கிய வாக்குத்தத்தத்தை தேவன் தருகின்றார். அதே அதிகாரம் 15ஆம் வசனத்தில் வாக்குத்தத்தம் நிறைவேற வழியைச் சொல்கிறார். **ஏசாயா 32:15 உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்.**

ஆவியானவர் ஓர் வாழ்க்கையில் வருமட்டும் சமாதானம், நிலையான தன்மை, அமைதியான வாழ்வு வராது. ஆனால் ஆவியானவர் வரும்பொழுதோ, **ஏசாயா 32:15 வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்.**

ஆம் பிள்ளைகளே, இந்த ஆண்டிலும் பரிசுத்த ஆவியினால் நிறைந்த வாழ்க்கை வாழுங்கள். பரிசுத்த ஆவியானவரால் நிறைந்த வாழ்க்கையைக் குறித்து அனேக காரியங்களை எழுத முடியும். இச் சஞ்சிகையில் ஓர் குறிப்பிட்ட அளவே எழுத முடியும் என்பதால் மிகவும் சுருக்கமாக எழுதுகின்றேன்.

வேதம் சொல்கிறது: **எபேசியர் 5:18-21 (18.) துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து; 19. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, 20. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, 21. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.**

பரிசுத்த ஆவியினால் நிறைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும், பரிசுத்த ஆவியினால் நிறைந்தவன் என்ன செய்வான் என்பதையும் இவ் வேத வசனங்கள் தெளிவாகச் சொல்கின்றது. உன்னதத்தின் ஆவியானவர் உங்கள் வாழ்வில் ஊற்றப்படும் வரைக்கும் வாழ்க்கை நிம்மதியற்றதாகவே இருக்கும். ஆனால் ஆவியானவரால் நிறைந்த வாழ்க்கை வாழும்பொழுதோ தேவ சமாதானம் உங்கள் வீட்டை நிரப்பும்.

## 02. பரிசுத்தமான வாழ்க்கை வாழவேண்டும்

**ஏசாயா 32:18**இல் ஆசீர்வாதமான வாக்குத்தத்தம். அது நிறைவேறுவதற்கு முதலாவது நிபந்தனை; **ஏசாயா 32:15.** இரண்டாவது நிபந்தனை; **ஏசாயா 32:16-17.**

அதாவது இவ் வசனங்கள் நியாயம், நீதியைக் குறித்துப் பேசுகிறது. பரிசுத்த வாழ்க்கை வாழ்பவனாலேயே நீதி, நியாயம் செய்ய முடியும். நீதி, நியாயமாக வாழ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரோமர் 12:1-2 (1.) அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. 2. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

நமது சரீரங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து இவ் உலக வழக்கங்களைப் பின்பற்றாமல் உலக மக்கள் நம்மை மதிக்க வேண்டும் என வாழாமல் தேவ பார்வையில் நான் சரியாக இருக்க வேண்டும் என்பதே பரிசுத்தமான வாழ்க்கை. இந்த பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதே தேவ சித்தமாகும்.

இறுதியாக வாசகர்களே! பரிசுத்த ஆவியானவரால் நிறைந்த வாழ்க்கை வாழுங்கள். அத்தோடு பரிசுத்தமான வாழ்க்கை வாழுங்கள்.

அப்பொழுது தேவன் உங்களுக்கு

**1. சமாதான தாபரத்தை தந்தருளுவார்.**

**2. நிலையான வாசஸ்தலத்தை ஆசீர்வதிப்பார்.**

**3. அமைதியாய் தங்கும் இடங்களை தந்தருளுவார்.**

நிச்சயமாக தேவன் உங்கள் வாசஸ்தலங்களை ஆசீர்வதிப்பார். நீங்கள் சமாதானத்தோடிப்பீர்கள். உங்களுக்கு நிலையான வாசஸ்தலங்கள் கிடைக்கும். அமைதியான இடங்களில் இளைப்பாறுவீர்கள்.

---

**வினாவிடை 112**
**சரியான பதில்கள்**

01. அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்கள் - 11பேதுரு 2:17
02. அப்போஸ்தலனாகிய பேதுரு - அப்போஸ்தலர் 3:6
03. இஸ்ரவேல் பிரபுக்கள் - 11நாளாகமம் 30:24
04. சிதேக்கியாவின் காலத்திலிருந்த பிரதானமான ஆசாரியர்கள் - 11நாளா 36:11-14
05. அப்போஸ்தலனாகிய பவுல் - அப்போஸ்தலர் 20:24
06. தேவாலயத்தில் இயேசுவுக்கு முன்பாக - யோவான் 8:2-11
07. ரெகொபெயாமும் இஸ்ரவேலரும் - 11நாளாகமம் 12:1-2
08. ஆசா ராஜாவின் காலத்தில் - 11நாளாகமம் 14:8-13
09. ஆகாஸ் ராஜா - 11நாளாகமம் 28:22
10. அப்சலோம் - தாவீதை - 11சாமுவேல் 16:11, 15:14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ திருமதி. J.பிலிப்




இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புதுவருட வாழ்த்துக்களை பெண்களாகிய உங்களுக்கு அனலின் பெண்கள் பக்கம் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றது. கடந்த 2022ஆம் ஆண்டை தேவ கிருபையால் கடந்து வந்தோம். அதே கிருபை 2023ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தும் என்ற விசுவாசத்துடன் கர்த்தரின் சித்தப்படி நடப்போமாக.

**லூக்கா 11:9 மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**

## 01. கேள்

### (ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்)

யாரிடம் நாம் கேட்கவேண்டும்? **யோவான் 4:8 சமாரிய நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ளவந்தாள்**, இயேசுவைக் கிணற்றினருகே சந்தித்தாள். யூதர்கள் சமாரியருடனே சம்பந்தக்கலவாதவர்கள். ஆனாலும் இயேசு ஸ்திரீயின் மேல் வைத்த அன்பின் நிமித்தம் அவளுடன் சம்பாஷித்தார். அவள் இயேசுவை அறியவில்லை. தனக்கு தாகமுண்டாகாமலும் இங்கே மொண்டு கொள்ள வராமலிருக்கும்படி தண்ணீரை தனக்கு தரவேண்டும் என்றும் கேட்டாள். இயேசுவிடம் கேட்டதை அவள் பெற்றுக்கொண்டாள். சுமந்து வந்த குடத்தை வைத்துவிட்டாள். காரணம், **ஜீவத்தண்ணீராகிய இயேசுவை கேட்டுப் பெற்றுக்கொண்டாள்.**

சகோதரியே, சமாரிய ஸ்திரீ குடத்தை சுமந்தது போல நீயும் ஒருவேளை சுமைகளைச் சுமக்கலாம். பாவபாரம் என்னும் சுமை, கடன் என்னும் சுமை, தீராவியாதி என்னும் சுமை என பல சுமைகளை நீயும் கடந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு சுமந்து கொண்டிருக்கலாம். ஆனால் இவ் ஆண்டு கர்த்தர் உன் சுமைகளை நீக்கிவிட ஆயத்தமாய் இருக்கிறார்.

இயேசு சமாரிய ஸ்திரீயின் வாழ்க்கை நிலையைக் காண்பித்த போது அதை ஏற்றுக் கொண்டாள்.

**யோவான் 4:16-18 (16.) இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார். 17. அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். 18. எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.**

இயேசு அவளைப் பார்த்து உள்ளபடி சொன்னாய் என்றார். கடந்த ஆண்டு கேட்டும் பெற்றுக் கொள்ளவில்லையா? இயேசுவுக்கு உன் நிலையை உள்ளபடி சொல். அப்போது நீ இயேசுவிடம் கேட்கிறதை பெற்றுக்கொள்வாய்.

## 02. தேடு

### (தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்.)

இன்று நீ எதைத் தேடுகிறாய்? இவ் ஆண்டு நீ தேடுகிறதை கண்டடைய வேண்டுமா? அப்படியானால் நீ செய்ய வேண்டியது என்ன? **1சாமுவேல் 25:17** அபிகாயிலுடைய வீட்டார் யாவர் மேலும் ஒரு பொல்லாப்பு வர இருக்கிறதை அறிந்த அபிகாயில் தாவீதைத் தேடி போகின்றாள். தாவீதைக் கண்டவுடன் முகங்குப்புற விழுந்து பணிந்து அடியாளின் பாதகத்தை மன்னியும் என்று கேட்டாள். தாவீது ராஜாவைத் தேடிக் கண்டுபிடித்தபடியால் வீட்டார் யாவரும் பாதுகாக் கப்பட்டார்கள்.

சகோதரியே கடந்த ஆண்டு நீ இயேசுவை எவ்வளவாய் தேடினாய்? வேதவாசிப்பு, ஜெபம், ஞாயிறு ஆராதனையில் இயேசுவை தேடிவந்தாயா? உனக்காக ஆயத்தமாக்கப்பட்ட பெண்கள் கூட்டத்தை தேடி வந்தாயா? சிந்தித்துப்பார். கர்த்தரை வாஞ்சையுடன் தேட வேண்டிய விதமாக நீதேடினாயா? அல்லது கடமைக்குத்தேடினாயா? **வருடத்தின் ஆரம்பத்தில் கால் எடுத்து வைத்திருக்கும் சகோதரியே இவ்வாண்டு கர்த்தரைத் தேட வேண்டியவிதமாக நீ தேடுவாயானால் அவரைக் கண்டு கொள்ளலாம்.**

## 03. தட்டு

### (தட்டுங்கள் திறக்கப்படும்.)

வருடத்தின் ஆரம்பத்தில் வந்து நிற்கும் சகோதரியே கடந்த ஆண்டு உன் இருதய கதவை யாருக்கு திறந்து கொடுத்தாய். இருவர் உன் இருதயக் கதவை தட்டுவார்கள். ஒன்று இயேசு மற்றது பிசாசு.


**வெளிப்படுத்தல் 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு உன்மேல் வைத்த அன்பின் நிமித்தம் உன் இருதயக் கதவைத் தட்டுகிறார். அவருக்கு மட்டும் நீ கதவைத் திறப்பாயா? இதை வாசிக்கும் சகோதரியே உன் இருதயத்தை ஆராய்ந்து பார். உன் இருதயம் எதனால் நிறைந்திருக்கிறது. **'உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை'** என்று வேதம் கூறுகிறது. இன்றைக்கே மனந்திரும்பு. இயேசுவுக்கு மட்டும் உன் இருதயக் கதவை திறந்து கொடு. அப்போது இவ்வருடம் முழுவதும் தேவ சமாதானம் உன் இருதயத்தை ஆட்கொள்ளும்.

சகோதரியே இவ் வருடம் உன் தேவைகள் எல்லாவற்றிற்கும் கேட்க வேண்டிய ஒருவர் உண்டு. **'அவர் தான் உன்னைத் தேடிவந்த இயேசு'.** அவரிடம் கேள்; பெற்றுக்கொள்வாய். உன் எல்லா தேவைகளுக்கும் உன் தேவனாகிய கர்த்தரின் சித்தத்தை அவர் வார்த்தை மூலம் நீ தேடுவாயானால் நீ கண்டடைவாய். உன் இருதயக் கதவை இயேசு தட்டும் போது அவருக்கு மாத்திரம் திறந்து கொடுப்பாயானால் அவர் உன் வாழ்க்கைக்குள் பிரவேசிப்பார்.

**மத்தேயு 7:8 ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.**



# வினா விடை - 113

01. 'தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டவன்' யார்?

02. 'கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்' என்றது யார்?

03. 'நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறு உத்தரவு அருளினீர்' என வாசிப்பதெங்கே?

04. 'தன் தலையின் மேல் புழுதியை வாரிப்போட்டுக் கொண்டவன்' யார்?

05. 'ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்' என்று பாடினது யார்?

06. 'கர்த்தர் சபித்த பூமியில்.... இவன் நம்மைத் தேற்றுவான்' என்று சொல்லி தன் மகனுக்கு நோவா என்று பேரிட்டவன் யார்?

07. பிறவாதிருந்த மனிதன் யார்?

08. 'கல்லு சுவரிலிருந்து கூப்பிடும்' என வாசிப்பதெங்கே?


09. 'பணப்பையை' வைத்திருந்த சீஷன் யார்?

10. மையினால் புஸ்தகத்தில் எழுதினேன் என்றது யார்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராக்லாந்து
## 1815 - 1858



### இயேசுவிற்காக...

அது ஓர் கிராமம். இயேசுவைப் பற்றி அறியாதவர்கள். அறியவும் விரும்பாதவர்கள். மூடப்பழக்க வழக்கங்களுக்குள் மூழ்கிக் கிடந்தவர்கள்.

இந்தியரின் இழிவு நிலையை மாற்ற இங்கிலாந்திலிருந்து வந்தார் ராக்லாண்ட். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். ஆயராகவும், கேம்ப்ரிட்ஜ் கல்லூரியின் மேற்பார்வையாளராகவும் பணியாற்றியவர்.

வடதிருநெல்வேலியில் அமைந்திருந்த கிராமங்களுக்கு நற்செய்தியை பறைசாற்ற உள்ளே நுழைந்தார். நுழைந்தது தான் தாமதம். கற்களும், தூசிகளும் அவரை நோக்கி வீசப்பட்டன. பிராமணன் ஒருவன் தடியால் தலையில் அடித்தான். இடம்விட்டு நகரும் முன்னே சரமாரியாக அடிகள் விழுந்தன. நடக்கக்கூட தெரியாத சிறு பையனும் கூட கல்லைத் தூக்கி எறிந்ததுதான் பரிதாபம்.

எதிர்ப்புக்களைக் கண்டு பழகிப்போன ராக்லாண்ட், அவர்களையும் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். பல ஆலயங்கள் சிவகாசி மற்றும் சுற்றுப் புறங்களில் கட்டப்பட்டன.

மழை, வெயில், பசி, அவமானப் பேச்சுக்கள், சரீர துன்பங்கள் எதையும் பொருட்படுத்தாது தன் ஊழியப் பணியைத் தொடர்ந்தார். அதிகாலையில் எழுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபிக்கும் பழக்கமுடையவர். அதிகாலை 4மணிக்கே ஊழியத்திற்கு சென்று விடுவார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்த சுவிசேஷச் செம்மல்.

பசியின் களைப்பினால் தொப்பியில் கூழ் வாங்கிக் குடித்துவிட்டு, மீண்டும் அலைந்து நற்செய்தி அறிவித்தவர். ஓயாத அலைச்சலினால் அவர் உடல் நலிந்தது. காச நோய் அவரைத் தாக்கியது. இரத்த வாந்தி எடுத்தார். விக்கிரக வணக்கத்தாரை இயேசுவின் பாதையில் நடத்திய ரக்லாண்ட் தமது 44ஆவது வயதில் மரணத்தை தழுவினார்.

நற்செய்தி செம்மலாக வாழ்ந்து காட்டிய ராக்லாந் ஏப்ரல் 16 அன்று பிறந்தார்.

**அன்பரே! பிரச்சினைகளைக் கண்டு ஓடுபவரா நீங்கள்? ராக்லாண்டை போல உறுதியுடன் செயல்படுவீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** நற்செய்தி பணியில் வெற்றியடைய தீட்டும் திட்டங்களில் மிகச் சிறந்த வழி இயேசு காட்டிய வழியே. அது கோதுமை மணிபோல் நிலத்தில் விழுந்து சாவதே — ராக்லாந்து.

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 16**



# காரி டென் பூம் - 1983

## அடியவருக்கு அடைக்கலம்

1940ஆம் ஆண்டில் ஹாலந்து தேசம் ஜெர்மானியப் படைகளிடம் சரணடைந்தது. ஹிட்லரின் கொடுமைகளுக்குத் தப்பி ஹாலந்து தேசத்திற்கு வந்த யூதர்கள் பிடித்துக் கொல்லப்பட்டனர். சிலர் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

காரி டென் பூம் குடும்பம், ஹாலந்து தேசத்தில் கடிகாரம் செய்யும் தொழிற்கூடம் ஒன்றை நடத்தி வந்தனர். உயிருக்குப் பயந்து ஓடி ஒழிந்த யூதர்களுக்கு அடைக்கலம் கொடுக்க தங்கள் வீட்டைத் திறந்து கொடுத்தனர். நூற்றுக்கணக்கான யூதர்கள் காரியின் குடும்பத்தினரால் சாவுக்குத் தப்பினார்கள்.

1943ஆம் ஆண்டு ஹிட்லரின் ரோந்து படை குடும்பத்தை குறிவைத்தது. கூண்டோடு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். சித்திரவதைகளினால் காரியின் தந்தையும், தங்கை பெத்சியும் மரித்துப் போனார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரி சிறைக்குள்ளே ஆராதனைகளை நடத்தி மக்களை ஆண்டவருக்குள் நடத்த ஆரம்பித்தார். தினமும் மறைவிடத்தில் இரண்டு ஆராதனைகள் நடத்தப்பட்டன. காரியின் டச்சு வேதாகமம் சிறைச்சாலையிலுள்ள அனைவருக்கும் மிகுந்த ஆறுதலாகக் காணப்பட்டது.

ஆண்டவரின் அநாதி தீர்மானத்தின்படி காரி டென் பூம் விடுதலை செய்யப்பட்டார். தேவன் தனக்கு செய்த மகத்துவங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

இரண்டாம் உலகப்போரில் அநாதைகளான மக்களுக்காக இல்லம் ஒன்றைக் கட்டி அவர்களுக்கு உதவினார். பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து தனது சிறைச்சாலை அனுபவங்களை எடுத்துரைத்து மக்களை விசுவாசத்தில் நிலைபெறச் செய்தார். காரி டென் பூம் ஓர் சிறந்த எழுத்தாளரும் ஆவார். 'மறைவிடம்' என்ற நூல் பிரபலமானது. பின்னர் அது படக்காட்சியாகவும் தயாரிக்கப்பட்டது.

பிறருக்காக வாழ்ந்த காரி டென் பூம் தனது பிறந்த தினத்திலேயே ஏப்ரல் 15, 1983இல் விண்ணுலகம் சென்றார்.

**அன்பரே! பாடுகள் வரும்போது பரமனின் பணியை எவ்விதம் செய்கிறீர்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** கிறிஸ்து மார்க்கத்தின் வேலை ஒருவனை துன்பத்திலிருந்து காப்பாற்றுவதல்ல, மாறாக துன்பத்திற்குள்ளேயே காப்பாற்றுவதாகும்

— ஸ்டான்லி ஜோன்ஸ்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 15**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❏ போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,
தலைமைப் போதகர், சீயோன் தேவாலயம், இலங்கை.




## ★ அடைக்கல ஆண்டு 2023 ★

**உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்.**
**- எரேமியா 1:8 -**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனல் வாசகர்கள் அனைவரையும் பிறந்திருக்கும் 2023ஆம் ஆண்டு முதல் அனல் சஞ்சிகையூடாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பிறந்திருக்கும் புதிய ஆண்டில் **'இதுவரை நடத்தின எபினேசர் இனியும் நடத்த போதுமானவராக இருக்கிறார்'** 2023ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமையும் என வாழ்த்தி புத்தாண்டு வாழ்க்களை எனது குடும்பத்தின் சார்பிலும், சீயோன் தேவாலயத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 2022ஆம் ஆண்டை நாம் எதிர்கொள்ளும் போது, பலவித மான பாதக நிலமைகள் காணப்பட்டது. ஒரே இடத்தில் அனைவரும் ஒன்றுகூடி தேவனை ஆராதிக்க முடியாத கட்டுப் பாடுகள், இருள் சூழ்ந்த நிலமைகள், எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின் றதோ? என்ற பீதிகள், இக்கட்டுக்களுடன் 2022ஆவது வருடத்திற்குள் பிரவேசித் தோம். அப்பொழுது ஆண்டவர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம்:

**"அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.'**

**சங்கீதம் 107:28**

இந்த வாக்குத்தத்த வார்த்தையை நாம் மறக்க முடியாது. அவ் வார்த் தையை ஆண்டவர் நமக்கு கொடுத்த போது நம்மை துன்பம் சூழ்ந்த இக்கட்டு கள் நீங்கலாக கூடிய சூழ்நிலையோ அல்லது விடுவிக்கப்படக்கூடிய நிலமை களோ அல்லது அதற்குரிய அறிகுறிகளோ தென்படாத நிலமை. ஆனாலும் இன்று 2022ஆம் ஆண்டை திரும்பிப் பார்த் தால் அவர் நடத்துதல் அற்புதமான தாகவும் ஆச்சரியமானதாகவும் அமைந் தது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். ஆம் அவர் தமது வார்த்தையில் உண்மையுள்ளவராக வெளிப்பட்டு **'விடுவிக்கும் ஆண்டு'** என்று கூறியபடி நாம் சந்தித்த உலகளாவிய நோய்த் தொற்றின் நிலமைகள், குழப்பங்கள், உறுதியற்ற அரசியல் மாற்றங்கள், பொருளாதார நெருக்கடிகள், நீண்ட வரிசையில் காத்திருக்கும் அனுபவங்கள் போன்ற எல்லாவிதமான இக்கட்டுகளுக் கும் நம்மை விடுவித்திருப்பதனால் அவருக்கும் அவருடைய வாக்குத்தத்தத் திற்கும் நன்றியையும் கனத்தையும் செலுத்துகின்றேன்.

இன்று பிறந்திருக்கும் இப் புதிய 2023ஆம் ஆண்டிலே ஆண்டவர் எமது திருச்சபைக்கும் எமக்கும் கொடுக்கும் வாக்குத்தத்த வார்த்தை:

**உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்.**

**எரேமியா 1:8**

I am with thee to deliver thee.

Jeremiah 1:8

இந்த வார்த்தை ஆண்டவர் எரேமியா தீர்க்கதரிசிக்கு கூறிய வார்த்தை.

எரேமியாவை தனக்காக, தனது பணிக்காக ஆண்டவர் தெரிவு செய்யும் போது அவனுக்குரிய அழைப்பினை உறுதிப்படுத்தும் வார்த்தைகளை கூறிய போது எரேமியா அவனுடைய சூழ்நிலை நிமித்தம் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கினான். அவ்வாறு அவன் தயங்கும் வேளையில் ஆண்டவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரேமியாவை தனக்காக தெரிவு செய் திருப்பதனை உறுதிப்படுத்துவதற்கும், அவனை நம்பிக்கையூட்டுவதற்கும் கூறிய வார்த்தை தான் **'உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்'.**

பாவம் நிறைந்த சேறும் குப்பையுமான உலகத்தில் பாவத்திற்குள் சிக்கித் தவித்த மனிதர்களாக நாம் பிறக்கிறோம் என்பதை பரிசுத்த வேதம் நமக்கு கற்றுக் கொடுக்கிறது. படைத்த ஆண்டவருக்கும் படைக்கப்பட்ட மனிதனுக்கும் பாரிய வெற்றிடம் இப்படிப்பட்ட இடைவெளி நிறைந்த சூழலில் ஒன்றுக்கும் உதவாத பிரயோஜனமற்ற ஒதுக்கப்பட்ட எம்மைத் தேடி இவ் உலகத்திற்கு வந்து தன்னுடைய பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி மரித்து அடக்கம்பண்ணப்பட்டுஉயிரோடுஎழும்பவே மனித வடிவில் இப் பூவுலகத்திற்கு ஆண்டவர் வந்தார். இதை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்களாக நம்மை முழு மனதோடு அவருக்கு அர்ப்பணிக்கும் போது ஆண்டவர் நம்மை தமக்கென்று தெரிந்தெடுத்திருக்கிறார். நாம் அவருக்கு உரித்தானவர்கள் என்பதனை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. எம்மையும் ஆண்டவர் தனக்காக அல்லது தனது பணிக்காக அவருடைய நாமத்தை சொல்லி அவரை உயர்த்தி மகிமைப்படுத்தவும் எம்மை அழைத்துள்ள படியால் எரேமியாவுக்கு கூறிய இதே தைரியமூட்டும் வார்த்தைகளை பிறந்திருக்கும் இந்த 2023 புதிய ஆண்டில் ஆண்டவர் எமக்கும் இவ் வார்த்தைகளைக் கூறி **தைரியமூட்ட விரும்புகிறார்.**

**'இருக்கிறேன்'** என்று தெளிவாக ஆண்டவர் கூறுவதனை இங்கே அவதானிக்கலாம். 'இருக்கிறேன்' என்பது ஆண்டவருடைய நாமம். எகிப்தின் அடிமைத்தனத்திலே இஸ்ரவேலர் அகப்பட்டு நெருக்கப்படுகின்ற வேளையில் ஆண்டவரை நோக்கி முறையிட்டு கதறியபோது ஆண்டவர் அவர்களை விடுவிக்க இறங்கினார் என்பதை பரிசுத்த வேதாகமத்தில் காணமுடியும். அவ்வாறு இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்கும்படி ஆண்டவர் தெரிவு செய்த பாத்திரம் மோசே. யாத்திராகமம் 3ஆம் அதிகாரத்தில் முட்செடியின் நடுவிலிருந்து ஆண்டவர் மோசேயை அழைப்பதனைக் காண்கிறோம். அவ்வாறு மோசேயுடன்பேசிஅவனை தனக்காக தெரிந்து கொண்டு அவனுக்கு இஸ்ரவேலரை விடுவிக்கும் பணியைக் கொடுத்தார். அவ்விதமாக ஆண்டவர் இந்த மோசேயை தனது பணிக்காக தெரிவு செய்த போது எரேமியாவைப் போல இவனும் ஆண்டவரின் வார்த்தையையும் ஆண்டவர் கொடுத்த பணியையும் ஏற்றுக்கொள்ள தயங்கி, ஆண்டவரே நான் எம்மாத்திரம் என்று கூறிய போது **யாத்திராகமம் 3:12 அதற்கு அவர்: <u>நான் உன்னோடே இருப்பேன்;</u> நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்.** 'உன்னோடு இருப்பேன்' என்று தைரியமூட்டுகின்றார். அவ்வேளை **யாத்திராகமம் 3:13 அப்பொழுது மோசே தேவனை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான்.** மோசே ஆண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடைய நாமத்தைக் குறித்து கேட்கும் போது ஆண்டவர் தெளிவாக தனது நாமத்தைக் கூறுகின்றார். **யாத்திராகமம் 3:14 அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்.** மோசேயை ஆண்டவர் தனது பணிக்காக அணிப்படுத்தும் போது தயக்கம் காண்பித்தான். அதே போல எரேமியாவும் தயக்கம் காண்பித்தான். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தினார். இவ்விருவருக்கும் தன்னுடைய நாமமாகிய 'இருக்கிறேன்' என்ற நாமத்தைக் கூறி தனது வார்த்தையை உறுதிப்படுத்து கிறார்.

நாம் ஆராதிக்கும் ஆண்டவர் கடந்த கால ஆண்டவர் அல்ல, அவர் மரித்துப்போன ஆண்டவரும் அல்ல, உணர்வுகள் அற்ற நிலையிலும் அவர் இல்லை. மாறாக அவர் **'நேற்றும் இன்றும் என்றும் மாறாத ஆண்டவர்'.** அவர் தன்னை வெளிப்படுத்தும் போது 'இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்று தெளிவாக வெளிப்படுத்துவதைக் காண முடிகிறது.

ஆண்டவர் 'இருக்கிறவராக இருக்கிறேன்' என்கிறாரே, அவர் ஏன் இருக்கிறார்? பல காரியங்களுக்காக அவர் இருக்கிறார் என்பதனை கூற முடியும். அன்புகூர இருக்கிறார், மிகப் பெரிய அற்புதங்களைச் செய்ய இருக்கி றார், உங்களை விடுவிக்க இருக்கிறார், சுகம் கொடுக்க இருக்கிறார், மீட்பைக் கொடுக்க உங்களோடு இருக்கிறார். உதாரணமாக, **எரேமியா 1:19 அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணு வார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.** *'இரட்சிக்கும் படிக்கு நான் உன்னுடனே கூட இருக்கி றேன்'* என்று ஆண்டவர் கூறுகிறார்.

இன்று பிறந்திருக்கும் புதிய 2023ஆம் ஆண்டில் ஆண்டவர் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட தமது ஜனமாகிய **எம்மைப் பார்த்து, எம்மைக் காப்பதற்காக** அவர் இருக்கிறேன் என்று கூறுகிறார். ஆண்டவர் **'இருக்கிறவரா கவே இருக்கிறார்'** அவர் இருக்கிறவராக இருப்பதற்கு காரணம்; **'நம்மைக் காக்கும் படிக்கே'.**

கோழி அடைகாத்து குஞ்சு பொரித்த பின்னர் தன்னுடைய குஞ்சு களுடன் வெளியே நடமாடுவதை நாம் காணமுடியும். அவ்வாறு கோழியும் குஞ்சுகளும் நடமாடிக் கொண்டிருக்கும் போது வேறு மிருகங்களாலோ பறவை களாலோ தன் குஞ்சுகளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படப்போகிறது என்று காணும் போது அது தனது எல்லாக் குஞ்சுகளை யும் தனக்கு அருகே அழைத்து, தன்னுடைய செட்டைகளை விரித்துக் கொள்ளும். அதன் செட்டைகளுக்குள் குஞ்சுகளும் பாதுகாப்பாக அடைக்கல மாக பதுங்கி இருப்பதனை நாம் கண்டிருக்கிறோம். **கோழியின் சிறகு – பாதுகாப்பிற்கு அல்லது அடைக்கலத் திற்கு அடையாளம்.** எனவே அந்த அடைக்கல நிழலில் தஞ்சம் அடைந்த குஞ்சுகள் மட்டுமே ஆபத்திலிருந்து பாதுகாக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பார்ந்தவர்களே, இந்த 2023ஆம் ஆண்டில் நீங்களும் காக்கப் படவேண்டுமா? அல்லது உங்களுக்கும் அடைக்கலம் தேவையாக இருக்கிறதா? அப்படியானால் நமது படைப்பின் காரணராகிய **'இருக்கிறவராகவே இருக்கிறேன்'** என்ற நாமத்தையுடைய எங்கள் ஆண்டவருடைய செட்டையின் நிழலில் தஞ்சமடைந்தால் நிச்சயம் இந்த புதிய ஆண்டு நாம் காக்கப்பட்டு அடைக் கலம் பெறும் ஓர் ஆண்டாக காணப்படும். **ஏசாயா 31:5 பறந்து காக்கிற பட்சி களைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துக் தப்பப்பண்ணுவார்; அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார்.** ஏசாயா தீர்க்கதரிசி மேல் கூறப்பட்ட வசனத்தில் தெளிவாக எருசலேமின் மேல் ஆண்டவர் பறந்து காக்கிற பட்சியைப் போல காக்கிற நிழலாயிருப் பார் என்று கூறுவதனைப் பார்க்கிறோம்.

எருசலேம் ஒரு அடைக்கல நகரம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த மகா நகரத்திற்கு ஒரு பட்சியைப் போல ஆண்டவர் அடைக்கலம் கொடுக்கிற வராய் இருக்கிறார். அந்த ஆண்டவருடைய அடைக்கல நிழலிலே நிச்சயம் அது காக்கப்படும் மகாராஜாவின் நகரம். இவ்வாறு இந்த 2023ஆம் ஆண்டிலே ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கும் அடைக்கலமாக இருந்து காப்ப வராக இருப்பாராக.

நம் எல்லோருக்கும் பரீட்சயமான நன்கு அறிந்த ரூத்தினுடைய சம்பவத் தைப் பார்ப்போமாக இருந்தால் வெறும் நான்கு அதிகாரங்களைக் கொண்ட இவ் சரித்திர புத்தகத்தில் எலிமெலேக்கு என்னும் பெத்லகேம் ஊரானான மனுஷன் தன் தேசத்தில் பஞ்சம் உருவான போது தனது குடும்பத்துடன் அந்நிய தேசமாகிய மோவாப் என்னும் தேசத் திற்கு சென்று அங்கே சஞ்சரித்தான். அவ் அந்நிய தேசத்தில் இவனுடைய இரண்டு குமாரரும் பெண் கொண்டார் கள். பின்னர் சில காலம் சென்றபின் எலிமெலேக்கும் அவனது இரண்டு குமாரரும் இறந்து போகின்றார்கள். இறுதியாக நகோமி ஆண்டவர் தன் ஜனத்தை சந்தித்தார் என்று கேள்விப் பட்டு மீண்டும் தன் தேசத்திற்கு செல்ல எத்தனிக்கிறாள். அவ்வேளையில் அவள் தன் மருமக்களாகிய ஓர்பாள் மற்றும் ரூத் இருவரையும் தங்கள் சொந்த இடத் திற்கே செல்லும்படியும் தான் தனியே தன்னுடைய சொந்த தேசமாகிய எருசலே முக்கு செல்லப்போகிறேன் என்றும் கூறினாள். அப்பொழுது ஓர்பாளும், ரூத்தும் சத்தமிட்டு அழுகின்றார்கள். அவ்வாறு அழுது ஓர்பாள் தன் மாமியாரை விட்டு விலகிச் சென்றுவிட்டாள்.

ஆனால் ரூத்தோ அவளை விடவில்லை. **ரூத் 1:16 அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.** என்று கூறி நகோமியுடன் செல்கின்றாள். இப்படிப்பட்ட காரியத்தை ரூத் செய்வதற்கு முடிவெடுத்ததன் நிமித்தம்; **ரூத் 2:11-12 (11.) அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப் பட்டது. 12. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடு வாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கல மாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக என்றான்.** இவ்வாறு போவாஸ் கூறுகின்றார்.

பிரியமானவர்களே, இங்கே ரூத் சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுத்து ஆண்டவருடைய நிழலை தெரிவு செய்து **ஆண்டவருடைய செட்டையின் கீழ் அடைக்கலமாக வந்தாள்.** அதன் நிமித்தம் ரூத் சென்ற இடமெல்லாம் ஆண்டவர் அவளுக்கு மனிதர்களின் கண்களில் தயவு கிடைக்கப்பண்ணி, அந்நிய தேசத்து அதாவது ஆண்டவர் புறக்கணித்த மோவாப் தேசத்து ஸ்திரீ யாகிய அவளுடைய பெயரை நிலைநிறுத்து கின்றார். அவளுடைய சந்ததியிலேயே ஆண்டவராகிய இயேசு மனிதனாகப் பிறந்தார். இவ்விதமாக இன்றும் அவள் பேசப்படுகின்றாள். ஆனால் அந்த ஓர்பாளின் கதை அத்தோடு முடிந்து போய்விட்டது. அவள் ஆண்டவருடைய நிழலை அல்லது அடைக்கலத்தை தேடி வரவில்லை. **எனவே இருக்கிறவராகவே இருப்பவரின் நிழலில் நாமும் அடைக் கலம் புகுவோம். அப்பொழுது நிச்சயம் நாமும் நமது சந்ததியும் காக்கப்படு வோம்.**

தீர்க்கதரிசி எலிசாவின் நாட்களில் சீரிய தேசத்து ராஜா இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தத்திற்கு புறப்பட தன் ஊழியக்காரருடன் ஆலோசனை பண்ணி இஸ்ரவேலை விழுத்த நினைத்து வேலை செய்தான். ஆனால் எலிசா தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவிடம் சீரிய ராஜாவின் திட்டத்தை முன்னரே வெளிப்படுத்தி எச்சரித்து முழு இஸ்ரவேலரையும் தப்புவித்துக் கொண்டு வந்தான். இதனால் சீரிய ராஜா குழப்பமடைந்து விசாரித்த போது எலிசா தீர்க்கதரிசியின் செயல் அவனுக்கு அறிவிக்கப்பட்டது. ஆகவே எலிசா தீர்க்கதரிசி இருப்பதனால் தான் இஸ்ரவேல் தேசத்துடன் யுத்தம் பண்ண முடியவில்லை. முக்கிய புள்ளியாகிய இந்த தீர்க்கதரிசியை அழித்துவிட்டால் இலகுவாக இஸ்ரவேல்தேசத்தை கைப்பற்ற லாம் என சீரிய ராஜா எண்ணுகிறான்.

**11இராஜாக்கள் 6:14-15 (14.) அப்பொழுது அவன் அங்கே குதிரைகளை யும் இரதங்களையும் பலத்த இராணுவத் தையும் அனுப்பினான்; அவர்கள் இராக் காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்து கொண்டார்கள். 15. தேவனுடைய மனுஷனின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில், இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங் களும் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டி ருக்கக் கண்டான்; அப்பொழுது வேலைக் காரன் அவனை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, என்னசெய்வோம் என்றான்.**

ஓர் பயங்கரமான பாரதூரமான நிலமை. இதைப்பார்த்த வேலைக்காரன் கலக்கமடைகின்றான். என்ன செய்வது என்று புரியவில்லை. பயம் ஆட்கொண்ட வனாக எலிசா தீர்க்கதரிசியின் கதை முடிந்தது என்று நினைக்கிறான். ஏனென் றால்பலத்தஎதிரிகளை அவன்கண்டதினால் பதற்றத்துடன் அதை தீர்க்கதரிசியாகிய எலிசாவிற்கு கூறிய போது **11இராஜாக் கள் 6:16-17 (16.) அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிற வர்கள் அதிகம் என்றான். 17. அப்பொழுது எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங் களாலும் அந்த மலை நிறைந்திருக் கிறதை அவன் கண்டான்.** திறக்கப்பட்ட கண்கள் மூலம் அந்த வேலைக்காரன், அவர்களைச் சுற்றிலும் அவர்களைக் காக்கும்படி ஆண்டவருடைய சேனைகள் இருந்ததைக் கண்டான்.

எனக்கு அருமையான தேவ ஜனமே, பிறந்திருக்கும் 2023ஆம் ஆண்டு உங்கள் கண்களுக்கு முன்பாக குதிரைகளும், இரதங்களும், பலத்த எதிர் கூட்டங்களும் உங்களை விழுத்துவதற்கு ஆயத்தமாக இருப்பதனைக் காணமுடியும். ஆனாலும் அவ் நெருக்கடியான பாதக மான நிலையிலும் ஆண்டவருக்கு உண்மையாக ஜீவிப்பீர்களாயிருந்தால் கலங்க வேண்டாம், திகைக்க வேண்டாம், பெரிய கூட்டத்தைக் கண்டு அதைரியப்பட வேண்டாம். அவர்களை விட மிகப்பெரிய ஆண்டவர், **'இருக்கிறவராக இருக்கிறேன்'** என்ற நாமத்தையுடையவர் உங்கள் நடுவில் இருப்பதை அல்லது உங்களை காக்கும்படி இருப்பதை மறந்துவிட வேண்டாம்.

இதேபோல பரிசுத்த வேதாகமத் தின் புதிய ஏற்பாட்டில் ஓர் உதாரணத்தை நான் காண்பித்துக் கொடுக்கிறேன். ஏரோது ராஜா சபையிலே மக்களை துன்பப்படுத்தி, யோவானுடைய சகோதர னாகிய யாக்கோபை பட்டயத்தால் கொன்றுபோட்டான். இவ்விதமாக பல கடினமான நிலைமைகளையும் பயமுறுத் தல்களையும் ஆண்டவருடைய பிள்ளை களாகிய ஆதி திருச்சபைக்கு செய்து கொண்டிருந்தான். இது யூதரை பிரியப் படுத்தினதினால் தொடர்ந்து பேதுருவை யும் பிடித்து சிறையில் அடைக்கின்றான். சிறையிலே பலத்த பாதுகாப்பு. வகுப்பிற்கு நான்கு போர்ச்சேவகர் வீதம் நான்கு வகுப்புக்கள் வசமாக ஒப்புவிக்கப்பட்டு இரண்டு சங்கிலிகளால் கட்டப்பட்ட நிலையில் பேதுரு இருந்தார். அவர் தப்பித்துக்கொள்ள முடியாத ஓர் நிர்க் கதியான சூழ்நிலையில் பேதுரு காணப் பட்டார். அப்படியான நேரத்தில் சபையினர் ஊக்கமாக பேதுருவுக்காக ஜெபித்தனர். அந்த நிர்க்கதியான நிலையில் தப்ப முடியாது, பலத்த பாதுகாப்பின் மத்தியில் இருந்த பேதுருவைத் தேடி தேவனுடைய தூதன் அந்த சிறைச்சாலையின் நடுவில் வந்தான். அப்போது அங்கே பெரிய வெளிச்சம் - பேதுருவைக் கட்டியிருந்த சங்கிலிகள் உடைக்கப்பட்டது.

**அப்போஸ்தலர் 12:8-11 (8.) தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக் கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப்போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான். 9. அந்தப் படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான். 10. அவர்கள் முதலாங்காவலையும் இரண்டாங்காவலையும் கடந்து, நகரத் திற்குப்போகிற இருப்புக்கதவண்டை யிலே வந்தபோது அது தானாய் அவர் களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டுப்போய்விட்டான். 11. பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலை யாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.**

தன்னைக் காக்கும்படி ஆண்டவர் தன்னோடு இருக்கிறார் என்பதை இந் நிலமையில் பேதுரு உணர்ந்து கொண்டார். தனக்கான அடைக்கலம் ஆண்டவர் என்பதை புரிந்து கொண்டார்.

இவ்வாறு பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் பல சம்பவங்களை முன்வைத்து ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளைக் காக்கும்படி அவர்களுடன் இருப்பதனைக் காண்பிக்க முடியும். ஆனாலும் இச் சில சம்பவங்களை மாத்திரம் இந்த புதிய ஆண்டில் உங்களுக்கு முன்வைத்திருக்கிறேன்.

அன்பார்ந்த அனல் வாசகர்களே! இன்று பிறந்திருக்கும் 2023 ஆவது ஆண்டில் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புவது, **'வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை'** என்று ஆண்டவர் கூறியுள்ளார். கடந்த ஆண்டிலும் தன்னுடைய வார்த்தையில் உண்மையுள்ளவராக ஆண்டவர் இருந்தபடியால் இவ் ஆண்டிலும் நிச்சயமாய் தன்னுடைய வார்த்தையை நிறைவேற்ற அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

தேவ ஜனமே இவ் ஆண்டில் எந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஊடாக கடந்து சென்றாலும், பலத்த எதிரிகள் சூழ்ந்து நின்றாலும், இருள் நிறைந்த அனுபவத்திற்கூடாக சென்றாலும், ஆண்டவருக்கு பயந்த பிள்ளைகளாக அவருடைய அடைக்கல நிழலின் கீழ் வருவீர்கள் என்றால் நிச்சயம் உங்களைக் காக்கும்படி அவர் உங்களோடு இருப்பார். **'இருக்கிறவராகவே இருக்கிறேன்'** என்ற நாமத்தில் தன்னை வெளிப்படுத்திய ஆண்டவர் இந்த 2023ஆம் ஆண்டில் உங்களை நடத்தி காத்து அடைக்கல ஆண்டு என்று கூறிய பிரகாரம் அவர் அடைக்கலமாகத் திகழ்ந்து உங்களைக் காக்கும்படிக்கு உங்களோடு இருப்பாராக.

**எரேமியா 1:8 உன்னைக் காக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்.**

ஆண்டவருடைய வருகை சீக்கிரம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து பாதுகாத்து இப் புதிய ஆண்டில் தம் சித்தப்படி நடத்துவாராக.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 110

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. எத்தியோப்பியா – ஆதி 2:13
04. கோகாத் – ஆதி 46:11
06. நெகேமியா – நெகே 13:31
07. யாகேல் – நியாயா 4:17
09. சாமுவேல் – 1சாமு 1:28
13. மாறுபாடான – நீதி 17:20

**வலமிருந்து இடமாக**


03. பார்வோன்நேகோ – 11இராஜா 23:29
05. யோயாக்கீம் – 11நாளா 36:8
08. கெர்சோம் – யாத் 2:22
10. மீகாள் – 11சாமு 6:16
11. ஆத்துமாவை – நீதி 15:32
12. கிருபையும் – சங்கீதம் 130:7

**மேலிருந்து கீழாக**

01. எக்கோலியாள் – 11நாளா 26:3
02. நெபாயோத் – 1நாளா 1:29
11. ஆகிஸ் – 1சாமுவேல் 27:6

**கீழிருந்து மேலாக**

14. ஒசேயா – எண்ணாகமம் 13:8
15. கீதரோன் – 1இராஜா 15:13



# குறுக்கெழுத்துப் போட்டி - 110, வினா விடை - 112

## சரியான விடை எழுதியவர்கள்

**காரைநகர்**
01. அ.எஸ்தர்
02. அ.தெபோரா
03. அ.கிருசாந்தன்
04. உ.சாத்ராக்
05. நா.அன்னாள்
06. நா.கிறிஸ்தீனா
07. நா.கிறிஸ்ரீன்
08. நா.கிருஷன்
09. வி.அனுராதா
10. பா.அனுகரன்
11. பா.அனுசியா
12. க.தனு

**தர்மபுரம்**
13. த.சுஜீனா
14. உ.ஜெருஷா ஜெனிபர்
15. வ.வசிகரன்
16. ஜா.ஜோன்வெஸ்லி +
17. பி.புகழ்நிலா *
18. பி.கலைச்சுடர்

**வடகாடு**
19. பா.மாலா

**பாண்டவெட்டை**
20. மு.ஜெசிந்தா
21. எஸ்.சிவனேஸ்வரன்
22. எஸ்.குளோறியா

**கிளிநொச்சி**
23. அ.மேனுஷா

**வேரவில்**
24. அ.சுதர்சினி +

**கடனா**
25. குகன் +

**திருநெல்வேலி**
26. என்.செல்சன்
27. செ.பியூலா

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாருக்கு நன்றி

**வேதப்பகுதி: சங்கீதம் 103:1-10**

ரித்தீசுக்கு அவனுடைய அங்கிள் ஒரு சின்ன ஸ்போர்ட்ஸ் சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். நான் கர்த்தரிடம் ஒரு சைக்கிள் தரும்படி ஜெபித்துக் கொண்டிருந்தேன். கர்த்தர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டார் என்றான் ரித்திஸ். ரித்திஸ் நான்தானே உனக்கு சைக்கிள் பரிசாக தந்தேன். ஆனால் கர்த்தருக்கு நீ ஏன் நன்றி செலுத்துகின்றாய்? என்று கேட்டார் அவனுடைய அங்கிள்.

அங்கிள் கர்த்தர் தான் உங்கள் வழியாக எனக்கு சைக்கிள் தந்தார். ஏனென்றால் நான் அவரிடம்தான் ஜெபித்து வந்தேன் என்றான் ரித்திஸ்.

ஆம் நமக்கு பல நன்மைகள் மனிதர்கள் வழியாக வரலாம். ஆனால் கர்த்தர் தான் அவர்களைக் கொண்டு நமக்கு அவைகளைத் தருகிறார். எனவே எந்த ஒரு நன்மைக்காகவும் கர்த்தருக்கு நன்றி கூற நாம் மறக்கக்கூடாது.

**சிந்தனைக்கு:-**

**நாம் கர்த்தரிடம் கேட்டதை அவர் மனிதர்கள் மூலமாகத் தருவார். ஆனாலும் நாம் கர்த்தர் செய்ததை மறந்துவிடக்கூடாது.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' ... 21

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா. அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர். மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி. இங்கிலாந்து. இத்தாலி. அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்


பெயர்:....................................

முகவரி:....................................

....................................

....................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







TO:
NOOLAGAM FOUNDATION
NO 55, SOMASUNDARAM AVE,
CHUNDIKULI,
JAFFNA

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org